**தமிழ் வளர்ச்சி இயக்ககம்**
**சென்னை – 600 008**

ந.க.எண்.5054/தமிழ் 1/2025 நாள் : 21.07.2025

**செய்திக்குறிப்பு**

பன்னூறு ஆண்டுகளாக வற்றாத படைப்புக்களைக் கொண்டு, சீரிளமையோடு இயங்கி வரும் தமிழுக்கும், தமிழ்மொழி, பண்பாட்டு வளர்ச்சிக்குத் தொண்டாற்றிடும் தமிழ்த்தாயின் திருத்தொண்டர்களுக்குத் தமிழால் விளங்கிடும் தமிழ்நாடு அரசு பல்வேறு விருதுகளையும் சிறப்புகளையும் அளித்து, அவர்தம் தொண்டுக்கும் தமிழுக்கும் பெருமை சேர்த்து வருகின்றது.

அவ்வகையில் எதிர்வரும் **2026–ஆம் ஆண்டுக்கான** திருவள்ளுவர் விருதுக்கும், **2025–ஆம் ஆண்டுக்கான** 73 விருதுகளுக்கும் தகைமையும் தொண்டறமும் பூண்ட தமிழறிஞர் பெருமக்களிடமிருந்து விண்ணப்பங்கள் வேண்டப்படுகின்றன.

**விருதுகளின்அணிவரிசை:–**

| வ. எண் | விருது | நபர் | பரிசு விவரம் |
|---|---|---|---|
| 1. | திருவள்ளுவர் விருது (2026) | 1 | ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை |
| | **2025 ஆம் ஆண்டிற்கான விருதுகள்** | | |
| 2. | மகாகவி பாரதியார் விருது | 1 | " " |
| 3. | பாவேந்தர் பாரதிதாசன் விருது | 1 | " " |
| 4. | தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது | 1 | " " |
| 5. | கி. ஆ. பெ. விசுவநாதம் விருது | 1 | " " |
| 6. | பெருந்தலைவர் காமராசர் விருது | 1 | " " |
| 7. | பேரறிஞர் அண்ணா விருது | 1 | " " |
| 8. | முத்தமிழறிஞர் கலைஞர் விருது | 1 | ரூ.10.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை |
| 9. | இலக்கிய மாமணி விருது | 3 | தலா ரூ.5.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை |
| 10. | தமிழ்த்தாய் விருது, | 1 | ரூ. 5.00 இலட்சம், கேடயம், தகுதியுரை |

| | | | |
|---|---|---|---|
| 11. | கபிலர் விருது, | 1 | ரூ.2.00 இலட்சம், தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை |
| 12. | உ.வே.சா. விருது, | 1 | " " |
| 13. | கம்பன் விருது, | 1 | " " |
| 14. | சொல்லின் செல்வர் விருது, | 1 | " " |
| 15. | உமறுப் புலவர் விருது, | 1 | " " |
| 16. | ஜி.யு. போப் விருது, | 1 | " " |
| 17. | இளங்கோவடிகள் விருது, | 1 | " " |
| 18. | அம்மாஇலக்கிய விருது, | 1 | " " |
| 19. | சிறந்த மொழி பெயர்ப்பாளர் விருது, | 10 | தலா. ரூ. 2.00 இலட்சம், தகுதியுரை, பொன்னாடை |
| 20. | 'சிந்தனைச்சிற்பி' சிங்காரவேலர் விருது, | 1 | ரூ.2.00 இலட்சம், தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை |
| 21. | அயோத்திதாசப் பண்டிதர் விருது, | 1 | " " |
| 22. | மறைமலையடிகளார் விருது, | 1 | " " |
| 23. | அருட்பெருஞ்சோதி வள்ளலார் விருது, | 1 | " " |
| 24. | காரைக்கால்அம்மையார் விருது, | 1 | " " |
| 25. | தமிழர்தந்தை சி.பா. ஆதித்தனார் திங்களிதழ் விருது, | 1 | ரூ.2.00 இலட்சம், கேடயம், தகுதியுரை, பொன்னாடை |
| 26. | தமிழ்ச் செம்மல் விருது | 38 | மாவட்டந்தோறும் ஒருவருக்கு தலா ரூ. 25,000/- மற்றும் தகுதியுரை |
| | **மொத்த விருதுகள்** | 74 | |

அறிஞர் பெருமக்கள் www.tamilvalarchithurai.tn.gov.in/awards மற்றும் http://awards.tn.gov.in என்ற இணைய தளங்களின் வழியாகவோ அல்லது www.tamilvalarchithurai.tn.gov.in என்ற இணையதள முகவரியின் வாயிலாக விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து தமிழ் வளர்ச்சி இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், தமிழ்ச்சாலை, எழும்பூர், சென்னை – 600 008 என்ற முகவரிக்கு அஞ்சல் வாயிலாகவோ 03.09.2025 ஆம் நாளுக்குள் விண்ணப்பங்களை அனுப்பிட வேண்டுகின்றோம். தக்க ஆவணங்களோடு விண்ணப்பங்கள் அமைதல் விரும்பத்தக்கது.

தமிழ்ச் செம்மல் விருதிற்கான விண்ணப்பங்கள் அந்தந்த மாவட்ட தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் / உதவி இயக்குநர் அலுவலகங்களின் வாயிலாக விண்ணப்பிக்கப்பட வேண்டும்.

கூடுதல் விவரமறிய விரும்புவோர் 044– 28190412, 044 – 28190413 ஆகிய தொலைபேசி எண்களை அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம். உரிய நாளுக்குள் (03.09.2025) பெறப்படும் விண்ணப்பங்களே ஏற்றுக் கொள்ளப்படும் என்பதை அறிஞர் பெருமக்கள் நினைவிற் கொள்ள அன்புடன் வேண்டுகின்றோம்.

தமிழ் வளர்ச்சி இயக்குநர்

## தமிழ்நாடு அரசின் விருதுகளுக்கான வரையறைகள்

1. **இலக்கிய மாமணி** (2021 முதல்)

தமிழுக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் வளம் சேர்க்கும் வகையில் பல்வேறு படைப்புகளைப் படைத்தும் பன்முக நோக்கில் தொண்டாற்றி வரும் தமிழ் அறிஞர்கள் மூன்று பேருக்கு ஆண்டுதோறும் இலக்கியமாமணி விருது வழங்கப்படும்.
(விருதுத்தொகை ரூ.5.00 இலட்சம், தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை)

2. **திருவள்ளுவர் விருது** (1986 முதல்)

திருக்குறள் நெறி பரப்பும் பெருந்தகையாளர்களில் ஒருவருக்கு திருவள்ளுவர் திருநாள் விழாவில் திருவள்ளுவர் விருது வழங்கப்படுகிறது.
(விருதுத் தொகை ரூ.2.00 இலட்சம், தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை)

3. **மகாகவி பாரதியார் விருது** (1997 முதல்)

பாரதியாரின் படைப்புகள் அனைத்தையும் முழுமையாகப் பயின்று ஆய்வு மேற்கொண்டு பாரதியாரைப் பற்றிய கவிதைகள் மற்றும் பாரதியின் புகழ் பரப்பும் வகையில் கவிதை, உரைநடை நூல்கள் படைத்தோர், பிற வகையில் தொண்டு செய்தோர், செய்பவர்களுக்கு மகாகவி பாரதியார் விருது வழங்கப்படுகிறது.
(விருதுத் தொகை ரூ.2.00 இலட்சம், தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை)

4. **பாவேந்தர் பாரதிதாசன் விருது** (1978 முதல்)

சிறந்த கவிஞர் ஒருவருக்கு பாவேந்தர் பாரதிதாசன் விருது வழங்கப்படுகிறது.
(விருதுத் தொகை ரூ.2.00 இலட்சம், தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை)

5. **தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது** (1979 முதல்)

இவ்விருது சிறந்த தமிழ் எழுத்தாளர் ஒருவருக்கு வழங்கப்படுகிறது.
(விருதுத் தொகை ரூ.2.00 இலட்சம், தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை)

6. **கி.ஆ.பெ. விசுவநாதம் விருது** (2000 முதல்)

இவ்விருது சிறந்த தமிழ் அறிஞர் ஒருவருக்கு வழங்கப்பட்டு வருகிறது. (விருதுத் தொகை ரூ.2.00 இலட்சம், தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை)

7. **பெருந்தலைவர் காமராஜர் விருது** (2006 முதல்)

தெருவெங்கும் பள்ளிகள் திறந்து, இலவசக் கல்வித்திட்டம், சத்துணவுத் திட்டம் முதலிய திட்டங்கள் மூலமாக தமிழ் சமுதாயம் கல்வி எனும்கைவிளக்கு ஏந்தி முன்னேற வழிவகுத்த வரலாறு படைத்த பெருந்தகையாளர் அவர்களின் அடிச்சுவட்டில், தமிழக மக்களுக்கு தொண்டாற்றி வரும் ஒருவருக்கு பெருந்தலைவர் காமராசர் விருது வழங்கப்படும்.
(விருதுத் தொகை ரூ.2.00 இலட்சம், தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை)

8. **பேரறிஞர் அண்ணா விருது** (2006 முதல்)

தமிழ்ச் சமுதாயம் முன்னேற்றம் காண அயராது பாடுபடும் ஒருவருக்கு அண்ணா விருது வழங்கப்படும்.
(விருதுத் தொகை ரூ.2.00 இலட்சம், தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை)

9. **முத்தமிழறிஞர் கலைஞர் விருது** (2024 முதல் )

தமிழினத் தலைவர் என்று தமிழ்நாடு மட்டுமின்றி உலகெங்கிலும் உள்ள தமிழர்களால் அன்பாக அழைக்கப்படும் தமிழ்நாடு அரசின் மேனாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தமிழ்த் தொண்டினைப் போற்றும் வகையில் ஆண்டுதோறும் முத்தமிழறிஞர் கலைஞர் அடியொற்றி தமிழுக்குத் தொண்டாற்றும் ஒருவருக்கு இவ்விருது வழங்கப்படும்.

(விருதுத்தொகையாக ரூ. 10 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை வழங்கி சிறப்பிக்கப்படும்)

10. **தமிழ்த்தாய் விருது** (2012 முதல்)

**தமிழ் அமைப்புகளுக்கு வழங்கப்படும் விருது**
தமிழகம் மற்றும் பிற மாநிலங்கள் மற்றும் பிற நாடுகளில் வாழும் தமிழர்கள், தங்களது பண்பாட்டு வேர்களைக் காப்பதற்காகப் பல்வேறு அமைப்புகளை உருவாக்கி மொழி இலக்கியம், கலை ஆகியப்

பணிகளை மேற்கொண்டு வரும் சிறந்த அமைப்புக்கு "தமிழ்த்தாய் விருது" வழங்குதல்.
(விருதுத்தொகை ரூ.5.00 இலட்சம், தகுதியுரை)

**11. கபிலர் விருது** (2012 முதல்)

பழந்தமிழர், தொன்மை, வரலாறு, நாகரீகம், பண்பாடு முதலியன புலப்படும் வகையிலும் தமிழுக்கு அணி சேர்க்கும் வகையிலும் மரபுச் செய்யுள் / கவிதைப் படைப்புகளை புனைந்து வழங்கும் தமிழறிஞருக்கு வழங்குதல்.
(விருதுத் தொகை ரூ.2.00 இலட்சம், தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை)

**12. உ.வே.சா விருது** (2012 முதல்)

கல்வெட்டுகள், அகழாய்வு, ஓலைச்சுவடிகள் அரிய கையெழுத்துப்படிகள், கிடைத்தற்கரிய நூல்கள் முதலியவற்றை அரும்பெரும் முயற்சியால் காணக்கிடைத்து வெளிக்கொணர்ந்தும், தமிழுக்கு வளம் சேர்க்கும் வகையில் பதிப்புப் பணிகளை மேற்கொண்டு வரும் அறிஞருக்கு வழங்குதல்.
(விருதுத் தொகை ரூ.2.00 இலட்சம், தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை)

**13. கம்பர் விருது** (2013 முதல்)

தமிழ் இலக்கிய உலகில் சிறந்து விளங்கிய கம்பரைப் பற்றித் திறனாய்வு செய்வோர், கம்பர் படைப்புகளை ஆய்வு செய்வோர், கவிபாடும் ஆற்றல் கதை நிகழ்ச்சி பாத்திரப்படைப்பு மற்றும் அவரது புகழ் பரப்பும் வகையில் கவிதை நூல்களை படைப்போர் மற்றும் பிற வகையில் தமிழ்த் தொண்டு செய்து வரும் தமிழறிஞருக்கு வழங்குதல்.
(விருதுத் தொகை ரூ.2.00 இலட்சம், தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை)

**14.சொல்லின் செல்வர் விருது** (2013 முதல்)

"சிறந்த இலக்கியப் பேச்சாளராகவும், தமிழர் நாகரிகம் பண்பாட்டை மக்கள் மனதில் சொற்பொழிவு வழி விதைப்பவராகவும் பிற வகையில் தமிழ்த் தொண்டு செய்வோராகவும் உள்ளவருக்கு வழங்குதல்
(விருதுத் தொகை ரூ.2.00 இலட்சம், தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை)

**15. உமறுப் புலவர் விருது** (2014 முதல்)

இஸ்லாமிய தமிழ் காப்பியங்களில் சிறந்த காப்பியமான சீறாப்புராணத்தை இயற்றிய உமறுப் புலவர் தமிழுக்கு ஆற்றிய அருந்தொண்டை போற்றும் வகையில், தமிழுக்கும், தமிழ் இலக்கியத்திற்கும் தொண்டாற்றிவரும் தமிழறிஞருக்கு வழங்குதல்
(விருதுத் தொகை ரூ.2.00 இலட்சம், தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை)

**16.ஜி.யு.போப் விருது** (2014 முதல்)

அயல்நாட்டு மொழிகளில் தமிழ் இலக்கியங்களை மொழிபெயர்க்கும் சிறந்த தமிழ் மொழி பெயர்ப்பாளருக்கு வழங்குதல்.
(விருதுத் தொகை ரூ.2.00 இலட்சம், தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை)

**17. இளங்கோவடிகள்** (2015 முதல்)

இளங்கோவடிகளின் நடையையொட்டி புதிய காப்பியம் படைப்பவருக்கோ அல்லது சிலப்பதிகாரத்தின் புகழ் பரப்பி வருபவருக்கோ வழங்குதல்
(விருதுத்தொகை ரூ.2.00 இலட்சம், தங்கப்பதக்கம், தகுதியுரை,பொன்னாடை)

**18. அம்மா இலக்கிய விருது** (2015 முதல்)

மகளிர் இலக்கியங்களைப் படைப்பதில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தித் தொண்டாற்றி வரும் பெண் படைப்பாளர் ஒருவருக்கு ஆண்டுதோறும் **அம்மா இலக்கிய விருது** என்ற புதிய விருது வழங்கப்படும்.
(விருதுத் தொகை ரூ.2.00 இலட்சம், தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை)

**19. சிறந்த மொழி பெயர்ப்பாளர் விருது (2015 முதல்)**

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்" என்ற பாரதியின் கனவை நனவாக்கும் வகையில் தரமான பிறமொழிப் படைப்புகளைச் சிறந்த முறையில் தமிழாக்கம் செய்யும் 10 மொழி பெயர்ப்பாளர்களுக்கு ஆண்டுதோறும் சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருது வழங்கப்படும்.
(விருதுத் தொகை ரூ.2.00 இலட்சம், தகுதியுரை, பொன்னாடை, தங்கப்பதக்கம் இல்லை)

20. **சிங்காரவேலர் விருது** (2018 முதல்)

தமிழில் அறிவியல் கருத்துக்களை நூலாக எழுதுபவர்களிலும், சமுதாய முன்னேற்றத்திற்காகவும், சமத்துவ கொள்கைக்காகவும், தொழிலாளர் நலனுக்காகவும் போராடுபவர்களிலும் சிறந்த ஒருவருக்கு ஆண்டுதோறும் **சிங்காரவேலர் விருது** என்ற புதிய விருது வழங்கப்படும்.
(விருதுத் தொகை ரூ.2.00 இலட்சம், தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை)

21. **மறைமலையடிகளார் விருது** (2019 முதல்)

தனித் தமிழில் படைப்புகள் அருகிவரும் நிலையில் தனித் தமிழில் படைப்புகளை உருவாக்கும் படைப்பாளர்களை ஊக்குவிக்கும் வகையில் தமிழறிஞர் ஒருவருக்கு ஆண்டுதோறும் மறைமலையடிகளார் விருது என்ற புதிய விருது வழங்கப்படும்.
(விருதுத் தொகை ரூ.2.00 இலட்சம், தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை)

22. **அயோத்திதாசப் பண்டிதர் விருது** (2019 முதல்)

சமத்துவம், பொதுவுடைமை, தமிழியல் ஆகிவற்றில் தனக்கென தனிமுத்திரைப் பதித்த தகைமையாளர் தமிழறிஞர் அயோத்திதாசப் பண்டிதர் பெயரில் அவர்தம் இலட்சிய நோக்கோடு செயன்மையாற்றும் ஒருவருக்கு ஆண்டுதோறும் அயோத்திதாசப் பண்டிதர் விருது வழங்கப்படும்.
(விருதுத் தொகை ரூ.2.00 இலட்சம், தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை)

23. **அருட்பெருஞ்சோதி வள்ளலார் விருது**

சமரச நெறிகளால் ஆன்மீகத் தொண்டாற்றும் ஒருவருக்கு ஆண்டுதோறும் 'அருட்பெருஞ்சோதி வள்ளலார்' விருது வழங்கப்படும்.
(விருதுத் தொகை ரூ.2.00 இலட்சம், தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை)

24. **காரைக்கால் அம்மையார் விருது**

காரைக்கால் அம்மையாரின் படைப்பிலக்கிய நெறிகளில் தமிழ்த் தொண்டாற்றி வரும் மகளிர் ஒருவருக்கு 'காரைக்கால் அம்மையார்' விருது ஆண்டுதோறும் வழங்கப்படும்.
(விருதுத் தொகை ரூ.2.00 இலட்சம், தங்கப்பதக்கம், தகுதியுரை, பொன்னாடை)

**25. தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் திங்களிதழ்விருது**

தமிழ்மொழியில் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றைப் போற்றியும், பிறமொழிக் கலப்பின்றி எழுதியும் வெளியிடப்பட்டு வரும் திங்களிதழுக்கு 'தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் திங்களிதழ் விருது' வழங்கப்படும். (விருதுத்தொகை ரூ.2.00 இலட்சமும் கேடயம், பாராட்டுச் சான்றிதழ், பொன்னாடையும் வழங்கப்படும்)

**தமிழ் வளர்ச்சி இயக்குநர்**